ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2451/18 - 2025 අගෝස්තු මස 27 වැනි බදාදා - 2025.08.27**

2451/18 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்ட 3ஆம் பிரிவின் கீழான கட்டளை**

திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களை கொண்டு, நகர அபிவிருத்தி,நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர்,அநுர கருணாதிலக்க ஆகிய நான், இதற்கான அட்டவணையின் 1 ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்ட பகுதியையும், அத்தகைய அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் காட்டப்பட்டுள்ள எல்லைகளின் வரையறைகளைக் கொண்டதுமான இப்பகுதியை அபிவிருத்திக்கு பொருத்தமானதென அபிப்பிராயப்படுவதினால், அந்தப் பகுதிகளை அந்த பிரிவின் நடவடிக்கைகளுக்காக நகர அபிவிருத்திப் பகுதிகளாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.

**அநுர கருணாதிலக்க (பா.உ),**
நகர அபிவிருத்தி, நிரமாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சு,
12வது மாடி,
“செத்சிறிபாய கட்டம்” - ii
பத்தரமுல்லை
2025, ஓகத்து 25.

1A - PG7234 - 19 (2025/08)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை I

### மதவாச்சி நகர பிரதேசத்தினை விரிவு படுத்தல்.

**நிரல் - I**

இலங்கைச்சனநாயக சோசலிச குடியரசின் 2007.10.03ஆம் திகதிய மற்றும் இலக்கம் 1517/14 கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகார பிரதேசமாக பிரகடனப்படுத்திய வடமத்திய மாகாணத்தின், அனுராதபுர மாவட்ட மதவாச்சி பிரதேச சபை அதிகார எல்லை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவினுள் அமைந்துள்ளதுமான கிராம அலுவலர் பிரிவுகள் இலக்கம்: 58 இசன்பெஸ்ஸகல, இலக்கம் 59: எகிரிகந்த, இலக்கம் 61 இரயில்வே நகரம்,இல. 66: கட்டுவெல, இல: 67 மேற்கு, மதவாச்சி, இலக்கம:68 கிழக்கு, மெதவாச்சி, ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிற்கு மேலாக இலக்கம்: 46 மஹகும்புக்கொல்லேவ, இல: 69 கனதரா திவுல்வெவ, இல: 78 சங்கிலிகனதராவ, இல: 65 வல்பொல, இல: 60 கடவத்கம, இல: 47 பூனேவ, ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை கொண்ட முழு பிரதேசத்தினை உள்ளடக்கிய பகுதியாகும்.

**நிரல் - II**

**வடக்கு :**

இலக்கம்: 51 குடாகும்புக்கோல்லேவ கிராம அலுவலர் 48 அனேகட்டிய கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையை குறுக்கு வெட்டும் (1)ஆரம்ப புள்ளியிலிருந்து இலக்கும் :48 அனேகட்டிய கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லயின் ஊடாக வடக்கு திசையினை நோக்கி பயணித்து இலக்கம்: 42 கிடாவரக்குலம் கிராம அலுவலர் பிரிவு மேற்கு எல்லையினை சந்திக்கும் புள்ளி (2)வரை , அந்த இடத்தில் இருந்து இலக்கம்: 42 கிடாவாக்குலம் கிராம அலுவலர் பிரிவு மேற்கு எல்லையின் ஊடாக தெற்கு மற்றும் கிழக்கு திசையினை நோக்கி வடக்கு புகையிரத பாதை மற்றும் கண்டி யாழ்ப்பாண வீதியை குறுக்கு வெட்டி பயணிக்கும் போது குறித்த கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையின் ஊடாக வடக்கு திசயனை நோக்கி பயணிக்கும் போது இலக்கம் 43:பிரபோதாகம் கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையை சந்திக்கும் (3) வரை, அந்த இடத்தில் இருந்து குறித்த கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையின் ஊடாக கிழக்கு திசையினை நோக்கி பயணித்து இலக்கம்:45 பழைய ஹல்மில்லேவ கொண்ட கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையினை சந்திக்கும் புள்ளி (4)வரையாகும், அந்த இடத்தில் இருந்து இலக்கம் :45 பழைய ஹல்மில்லேவ கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையின் ஊடாக தெற்கு திசையினை நோக்கி பயணித்து இலக்கம்: 52கடவத் ரம்பேவ கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையினை சந்திக்கும் புள்ளி(5)வரையாகும்.

**கிழக்கிற்கு :**

கடைசியாக குறிப்பிட்ட புள்ளியிலிருந்து (5) இருந்து இலக்கம் 52கடவத் ரம்பேவ கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையின் வழியாக் தெற்கு திசையினை நோக்கி பயணித்து இலக்கம்:57 மஹதிவுல்வெவ கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையினை சந்திக்கும் புள்ளி(6)வரையும், அந்த இடத்தில் இருந்து நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தொடர் இலக்கம்: 1517/14 மற்றும் 2007.10.03 வர்த்தமானி அறிவித்தல் ஊடாக பிரகடனப்படுத்தப்பட்ட எல்லைகளை சந்திக்கும் புள்ளி (7) வரை பயணித்து, அந்த இடத்தில் இருந்து இலக்கம்:70 ஹெலம்பகஸ்வெவ கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையின் வழியே மதவாச்சிய ஹோரோவ்பொத்தான வீதியை குறுக்கு வெட்டிக் கொண்டு,தெற்கு மற்றும் கிழக்கு திசையினை நோக்கி பயணித்து இலக்கம்: 72 கிரிகல்வெவ கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையினை சந்திக்கும் புள்ளி(8) வரை, அந்த இடத்தில் இருந்து அந்த கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையின் ஊடாக பயணித்து இலக்கம் :77 லிந்தவெவ கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையினை சந்திக்கும் புள்ளி (9)வரை, அந்த இடத்தில் இருந்து அந்த கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையின் ஊடாக தெற்கு திசையினை நோக்கி பயணித்து ரம்பேவ பிரதேசசபை அதிகார பிரதேசத்தின் வடக்கு எல்லையை சந்திக்கும் புள்ளி (10) வரை,

**தெற்கிற்கு :**

கடைசியாக குறிப்பிட்ட புள்ளியிலிருந்து (10) ரம்பேவ பிரதேசசபை அதிகார பிரதேசத்தின் வடக்கு எல்லையின் ஊடாக மேற்கு திசையினை நோக்கி பயணித்து நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தொடர் இலக்கம்: 1517/14 மற்றும் 2007.10.03 வர்த்தமானி அறிவித்தல் ஊடாக பிரகடனப்படுத்தப்பட்ட எல்லைகளை சந்திக்னகும் புள்ளி (11) வரையும், அந்த இடத்தில் இருந்து குறித்த எல்லையின் ஊடாக பயணித்து இலக்கம்: 64 விரல்முரிப்புவ கிராம அலுவலர் பரிவின் கிழக்கு எல்லையினை சந்திக்கும் புள்ளி(12) வரையாகும்.

**மேற்கிற்கு:-**

கடைசியாக குறிப்பிட்ட புள்ளி இலக்கம்: 12இருந்து இலக்கம்: 1517/14 மற்றும் 2007.10.03 வர்த்தமானி அறிவித்தல் ஊடாக பிரகடனப்படுத்தப்பட்ட எல்லையின் வழியாக வடக்கு திசையினை நோக்கி பயணித்து இலக்கம்:64 விரல்முரிப்பு கிராம அலுவலர் பிரிவின் இலக்கம் (13)கிழக்கு எல்லையின் வழியாக மற்றும் வடக்கு எல்லையின் ஊடாக வடகிழக்கு மற்றும்

வடமேற்கு திசையினை நோக்கி வடக்கு புகையிரத பாதையை குறுக்கு வெட்டிக்கொண்டு பயணித்து, இலக்கம்:62புல்எழிய கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையினை சந்திக்கின்ற (14) புள்ளிவரை, அந்த இடத்தில் இருந்து குறித்த கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையின் ஊடாக வடமேற்கு திசையினை நோக்கி பயணித்து இலக்கம் :51குடாகும்புக்கோல்லேவ கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லை(15)சந்திக்கும் வரை, அந்த இடத்தில் இருந்து குறித்த கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையின் ஊடாக பயணித்து ஆரம்ப புள்ளியை அடையும்வரை ஆகும்.

EOG 08-0280